பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 08 2024 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லியில் நடைபெறும் 9-வது இந்திய-பிரேஸில் கூட்டு ஆணையக் குழுவின் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேஸில் வெளியுறவு அமைச்சர் திரு. **Mauro Vieira** இன்று பங்கேற்கின்றனர்.

2. மகாராஷ்ட்ராவின் சிந்துதுர்க்கில் உள்ள சத்ரபதி சிவாஜி சிலை சேதமடைந்த சம்பவம் தொடர்பாக, உடனடி விசாரணைக்கு இந்திய கடற்படை உத்தரவிட்டுள்ளது.

3. கடந்த மூன்றாண்டுகளில் தமிழகத்தில் 31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

5. கொரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி, சியோலில் இன்று தொடங்குகிறது.

>>>><<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேஸில் வெளியுறவு அமைச்சர் திரு. **Mauro Vieira** இருவரும் புதுதில்லியில் நடைபெறும் 9-வது இந்திய-பிரேஸில் கூட்டு ஆணையக் குழுவின் கூட்டத்தில் இன்று பங்கேற்கின்றனர்.

இந்த ஆண்டுக்கான ஜி.20 தலைமைத்துவத்தை பிரேஸில் வகித்து வரும் நிலையில், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு நிகழ்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ஆண்டுக்கான ஜி.20 தலைவர்கள் உச்சி மாநாடு ரியாடிஜெனிரோவில் வரும் நவம்பர் 18, 19ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

>>>><<<<

ஐரோப்பிய நாடான மால்டோவா-வின் சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. **Mihai Popsoi-** க்கு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இருநாட்டு உறவை மேலும் வலுப்படுத்துவதை ஆவலோடு எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறவுள்ளது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஆறு மாவட்டங்களில் உள்ள 24 தொகுதிகளில் அடுத்த மாதம் 18ஆம் தேதியன்று இந்த முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்ட தேர்தல் செப்டம்பர் 25ஆம் தேதியும், மூன்றாம் கட்ட தேர்தல் அக்டோபர் ஒன்றாம் தேதியும் நடைபெறுகிறது.

தேர்தல் முடிவுகள் அக்டோபர் 4ஆம் தேதியன்று வெளியிடப்படும்.

மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளில் 74 பொதுத் தொகுதிகள் ஆகும்.

7 தனித்தொகுதிகள் ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்களுக்கும், 9 தனித்தொகுதிகள் பழங்குடியின வேட்பாளர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

>>>><<<<

மகாராஷ்ட்ராவின் சிந்துதுர்க் பகுதியில் அமைந்துள்ள சத்ரபதி சிவாஜி சிலை இடிந்து விழுந்த சம்பவம் தொடர்பாக, இந்திய கடற்படை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப்பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக, அச்சிலை சேதமடைந்ததாக செய்திகள் வெளியான நிலையில், இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக சிறப்பு நிபுணர்கள் மற்றும் மாநில அரசுடன் கடற்படை ஆலோசனை மேற்கொண்டதாகவும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த இடத்தில் சிலையை மீண்டும் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

கடந்த மூன்றாண்டுகளில் தமிழகத்தில் 31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கி தரப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் அடுத்த மாதம் 14ஆம் தேதிவரை தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் அவர் அமெரிக்காவில் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், தமது கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

43 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக முதலமைச்சராக, அங்கு வாழும் தமிழர்களை சந்திக்கவிருப்பது, தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருவதாக அக்கடிதத்தில் திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

தமிழ்நாட்டில் குரங்கு அம்மை நோய் பாதிப்பு இதுவரை கண்டறியப்படவில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இன்று விழிப்புணர்வு கருத்தரங்கத்தை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 38 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் அலையாத்தி காடுகள் அமைந்துள்ள பகுதியில் 'தமிழ் வாழ்க' என்ற எழுத்துக்களின் வடிவில் மாநில வனத்துறையால் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால், நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு தனித்தன்மையுடன் காட்சியளிக்கும் என்று வனத்துறை தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 41 செகண்ட்ஸ்)

>>>><<<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**Bela** என்னுமிடத்தில் நடைபெற்ற இந்த தாக்குதலில் 14 பாதுகாப்புப்படை வீரர்களும், 21 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாக அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**Musakhel** மாவட்டத்தில் நிகழ்ந்த மற்றொரு தாக்குதல் சம்பவத்தில் பொதுமக்களில் 23 பேர் உயிரிழந்தனர்.

மேலும், **Kalat** பகுதியில் நெடுஞ்சாலை ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 காவல்துறையினர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாகவும், மற்றொரு தாக்குதலில் 6 அடையாளம் தெரியாத உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அம்மாகாண காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>><<<<

குஜராத் மாநிலத்தில் உள்ள 7 மாவட்டங்களில் இன்று கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ராஜஸ்தான் கடல் பகுதியில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, குஜராத்தில் பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் மழையால், அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கையை அடுத்து, அம்மாநிலத்தில் உள்ள அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு அம்மாநிலத்தில் உள்ள மீனவர்கள் கடலுக்குக்கு செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

அன்னை தெரசா சர்வதேச விருதுகள் விழா துபாயில் நேற்று நடைபெற்றது.

இந்திய தொழில்துறையைச் சேர்ந்த திரு. சித்தார்த் ஸ்ரீவத்சவா, திரு. நமித் பஜோரியா உட்பட பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பல நாடுகளைச் சேர்ந்த சாதனையாளர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

அகில இந்திய சிறுபான்மையின மற்றும் நலிவடைந்தோர் கவுன்சில் சார்பாக நடத்தப்படும் இந்த விழா, வெளிநாடு ஒன்றில் இரண்டாவது முறையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

சர்வதேச குத்துச்சண்டை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1974ஆம் ஆண்டு கியூபாவின் ஹவானாவில் சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு நடத்திய முதலாவது உலக சாம்பியன் போட்டியை நினைவு கூரும் வகையில் இந்த தினம் பின்பற்றப்படுகிறது.

>>>><<<<

கொரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி, சியோலில் இன்று தொடங்குகிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Rutaparna Panda – Swetaparna Panda** இணை தைவான் இணையை எதிர்கொள்கிறது.

இந்த போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>><<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான நட்புறவு கால்பந்து போட்டியில் இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

இந்தோனேஷியாவின் பாலி-யில் இப்போட்டி மாலை மணி 5.30க்கு தொடங்குகிறது.

கடந்த 25ஆம் தேதியன்று இவ்விரு அணிகளுக்கும் இடையே முதல் போட்டி நடைபெற்றது.

>>>><<<<

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-0, 6-4 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Krittin Koaykul** -ஐ வென்றார்.

>>>><<<<

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்தின் **Tallon Grieks Poor** 6-1, 6-3, 7-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் சுமித் நாகலை வென்றார்.

>>>><<<<